EVANGELICAL BIBLE COLLEGE OF WESTERN AUSTRALIA
சுவிஷேச வேதாகமக் கல்லூரி மேற்கு ஆஸ்திரேலியா

21 ம் நூற்றாண்டு விசுவாசிகளுக்கு வேதாகம தீர்க்கதரிசனம் மூலம் டாக்டர் பீட்டர் ஜான் மோசஸ் அவர்கள் ஊக்கமளித்தல்

ENCOURAGEMENT FOR BELIEVERS

THROUGH BIBLE PROPHECY

IN THE

21ST CENTURY

by

DR PETER JOHN MOSES

[BOOK 129]

[புத்தகம் 129]

AUGUST 2015
ஆகஸ்ட் 2015.

இயேசுக்கிறிஸ்து யார்?

பேராசிரியர் சைமன் கிரீன்லீஃப் எல்லா காலங்களுக்கும் தலைசிறந்த வழக்கறிஞராய் விளங்கிவருகிறார். அவரது "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” அநேக ஆண்டு காலங்களாய் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிலையான ஒழுங்குமுறை பரிசீலனைக்குரிய விஷயமாய் இருந்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள ஒரு பல்கலைக் கலகத்தில் அவர் சட்டம் குறித்த பாடங்களைப் போதித்துக் கொண்டு இருந்த சமயத்தில், அங்குள்ள மாணவர்களில் ஒருவன் சரித்திரப் பூர்வமான ஒருவரை

"ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” மூலம் விவரிக்க முடியுமா என வினவினான். கிரீன்லீ்ஃப் அம்மாணவனை நோக்கி விவரிக்க முடியும் என ஒத்துக்கொண்டவராய், அச்சரித்திரப் பூர்வமான நபர் யார் என அவனை நோக்கி வினவினார். அதற்கு அம்மாணவன் மறுமொழியாக, பரிசீலனைக்குரிய அந்நபர் இயேசுக்கிறிஸ்து என்றான். பேராசிரியர் கிரீன்லீ்ஃப் ஒத்துக்கொண்டவராய் பரிசீலனைக்காக இயேசுக்கிறிஸ்துவை எடுத்துக்கொள்ள முன்வந்தார், அவர் தனது பரிசீலனையை முடித்துக்கொண்ட போது, அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் பேராசிரியர் கிரீன்லீ்ஃப் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள எல்லா நீதி சார்ந்த அலுவலர் அனைவருக்கும் வெளிப்படையான ஒரு கடிதத்தை எழுதி அதில் தான் தனிப்பட்ட விதத்தில் இயேசுக்கிறிஸ்துவை கண்டுகொண்ட விதத்தை விவரித்து இருந்தார். இயேசுக்கிறிஸ்துவைக் குறித்த விஷயங்கள் சரித்திரப்பூர்வமாய் மிகத் துள்ளியமானவை என முழு நிச்சயத்துடன் ஆதாரங்களுடன் எழுதி அனுப்பினார். மட்டுமல்லாது இயேசுக்கிறிஸ்து மனிதரைவிட மேம்பட்டவர் என்றும், அவர் கடவுளோ அல்லது இல்லையோ என்பதை பரிசீலித்த போது, அவர் கடவுளைத் தவிர வேறு எவருமல்லர், என்பதை மிக உறுதியாய் ஆராய்ந்து கண்டுகொண்டேன். அவரைக் கடவுளாய் கண்டுகொண்ட மாத்திரத்தில் அவரை எனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டேன் என எழுதினார். ஆகவே நீதித்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு நபரும் "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” ஐ பயன்படுத்தும் பொழுது, அவரைக்குறித்து தவறாய் புரிந்துகொள்வதைத் தவிர்த்து, ஒருவேளை அவரை உங்களது சொந்த இரட்சகராய், ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் மேற்கூறிய பிரமாணத்தின் மூலம், அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்றும், சரித்திரப் பூர்வமாய் அவரைக் குறித்த விஷயங்கள் அனைத்தும் முற்றிலும் உண்மை என்பதையும், கண்டுகொள்ளுங்கள் என எழுதி முடித்தார்.

<u>நான் எவ்வாறு இரட்சிப்படைய முடியும்?</u>

மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருக்கும் இரட்சிப்பு என்பது கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.
இரட்சிப்பு என்பது, மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவும், தேவனது அண்டசராசரத்தில், அனைவராலும் எடுத்துக்கொள்ளப் படக்கூடியதாயும் இருக்கிறது. பாவிகளின் இரட்சிப்பு என்பது, தேவன் பாவத்தை கண்டும் காணாமல், கடந்து செல்லும் காரியமாகாது. தேவன் பாவிகளை முற்றிலும், தமது நீதியின் அடிப்படையில், தனது தெய்வீக பரிசுத்த குணாதிசயத்தின் அடிப்படையில், இரட்சிக்கிறவராய் இருக்கிறார். இது 'கிருபை' என அழைக்கப்படுகிறது. இது தேவனை மட்டும் சார்ந்ததாய் இருக்கிறது, இதற்கென மனிதன் எவ்வித கிரியையும் [புண்ணியக்கிரியைகள், தவக்கிரியைகள் போன்ற எதையும்] நடப்பிக்க அவசியமில்லை. அளவிட முடியாத, பிரமாண்டமான, இவ்வண்ட சராசரத்தின் சிருஷ்டிப்பின் கிரியைவிட, தேவன் பாவிகளை இரட்சிக்கும் திட்டமானது, மிகவும் குறைவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. என்பதை நாம் உணரவேண்டிய வர்களாய் இருக்கிறோம். .

எப்படியிருப்பினும், தேவனுடைய இரட்சிப்பை ஒரு பாவி ஏற்றுக்கொள்வது என்பது வாழ்வில் மிக எளிதான ஒன்றாய் இருக்கிறது. ஒருவர் ஐசுவரியவானாய் இருத்தல் அவசியமற்றது, ஞானமுள்ளவராகவோ, மற்றும் படிப்பறிவுள்ளவராகவோ இருத்தல் அவசியமற்றது. வயதோ அல்லது தோலின் நிறமோ இதற்கு எவ்விதமான தடையையும் கொண்டுவருவது இல்லை. தேவனுடைய மீட்பில் இருக்கும், எண்ணிமுடியாத நன்மைகளானது, மிக எளிதாய்

ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் அமைந்து இருக்கிறது, இப்பரந்த அண்டசராசரத்தில், ஒவ்வொருவரும் இதை அடைந்து கொள்வதற்கு விதிவிலக்கின்றி காணப்படுகின்றனர்.

நான் ஒரு கிறிஸ்துவை உடையவனாவது எவ்வாறு?

ஒரு எளிய படி எடுத்து வைப்பதை மூன்று பிரிவுகளாய் பிரிக்கலாம். முதலாவது, நான் ஒரு பாவியாய் இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம். (ரோமர் 3:23; 6:23; எசேக்கியேல் 18:4; யோவான் 5:24).

இரண்டாவதாக, பூரணமாய் இருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனுடன் உறவுகொள்ளும் விருப்பத்தை உணருதல் வேண்டும், மற்றும் அவ்வாறு உறவுகொள்ள நான் பூரணமற்றவனாய் இருக்கிறேன் என்பதை உணருதல் வேண்டும், நான் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஒருவரே இரட்சகர் என்று கண்டுகொள்ள அவசியமாய் இருக்கிறது. (1 கொரி. 15:3; 1 பேதுரு 2:24; ஏசாயா 53:6; யோவான். 3:16).

மூன்றாவதாக, எனது சொந்த சுயசித்தத்தை பயன்படுத்தி, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை எனது இரட்சகராய் ஏற்றுக்கொண்டு, அவரை தனிப்பட்ட விதத்தில் அவர் எனக்காய் மரித்தார் என்று நான் விசுவாசித்து, எனது தனிப்பட்ட வாழ்வின் மூலமாய், அவரை, என் வாழ்விற்கு அவசியமான, தனிப்பட்ட ஒரு நபராக ஏற்றுக்கொள்ளுதல், அவசியமான ஒன்றாய் இருக்கிறது. (யோவான் 1:12; 3:36; அப். 16:31; 4:12).

இரட்சிப்பின் விளைவுகள்:

இதன் விளைவுகள் என்பது நம்புவதற்கறிய அற்புதமானதாய் இருக்கிறது:

- எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அகற்றப்பட்டன. (யோவான் 1:29),
- நான் தற்போது, நித்திய ஜீவனைப் பெற்று இருக்கிறேன் (1 யோவான் 5:11,12),
- நான் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாய் மாறி இருக்கிறேன் (2 கொரி. 5:17),
- பரிசுத்த ஆவியானவர், எனது சரீரத்தை தமது வாசஸ்தலமாய் அமைத்துக் கொண்டுள்ளார் (1 கொரி. 6:19),
- நான் ஒருபோதும் அழிந்து போவதில்லை (யோவான் 10:28-30).

இவ்வுண்மைகள் வாழ்வின் மிகப்பெரிய பரிமாற்றங்களாய் இருக்கின்றன. இதுவே எல்லா மக்களுக்குரிய இலக்காய் இருக்கிறது; இதுவே நமது வாழ்வின் மேலான நோக்கமாய் இருக்கிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பின்பற்றச் செய்யும் இவ்வெளிய போதனைகளால் உற்சாகப்படுத்தி, தேவனுடைய பரிசுத்த குடும்பத்தில் மறுபடி பிறந்து, நித்திய வாழ்வையடைய உற்சாகப்படுத்துங்கள். (மத். 11:28; யோவான் 1:12; அப். 4:12; 16:31).

Many other Christian resources are available freely from our internet web site: www.ebcwa.org.au, and www.http://ebcwa.free.org.nz . For additional EBCWA books dealing with Biblical Prophecy please see the appendix of visit the website.

For further information contact Dr Peter Moses at pjmoses@bigpond.com.au

Book 125 is the Omnibus Study Book for Biblical Prophetic Trends over the period 1945-2015

<u>பொருளடக்கம்</u>

CONCLUDING REMARKS

இறுதிக் கருத்துக்குறிப்புகள்

செயலாக்க சுருக்கம்

கிறிஸ்தவர்களைப் பொருத்தமட்டில், கடினமான சூழல் பெருகிவருகிற காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம். அநேக தேசங்களில் தானாகவே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, மேற்கத்திய உலக ராஜ்ஜியங்கள் மூலம், கிறிஸ்தவ வேதாகம அடிப்படையில் சட்டங்களைத் தழுவி வந்த காலம் கடந்து போய்க் கொண்டிருக்கிறது.

சமூக மீடியாக்கள் மூலம் 24 மணி நேர செய்திகள் மூலம், சமுதாயம் அதற்கு அடிமைப் பட்டு வருகின்றன. அதில் ஒலிபரப்பாகும் செய்திகள் கெட்ட மற்றும் அச்சமூட்டுகிற செய்திகளாய் இருந்து வருகின்றன. வேதாகம கட்டளைகள் பரிகாசத்திற்கு உள்ளாகி வருகின்றன. அவர்களது இணைக்கப்பட்ட ஒலிபரப்பானது, விசுவாசிகளை குறித்த செய்திகளும், வேதாகமத்தைக் குறித்த அறிவும் "மேற்கத்திய குடியாட்சிகளில்" இடம் பெறாது புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

அநேகர் இவ்வாறு கூறக்கூடும், "இந்த 21 ம் நூற்றாண்டில் தேவன் என்ன செய்து வருகிறார்?" உண்மை என்னவெனில் தேவன் என்ன நிகழப்போகிறது என்பதைக் குறித்த எச்சரிப்புடன் காணப்படுகிறார். கடந்தகால நித்தியத்தில் என்ன நிகழவிருக்கிறது என்பதைக் குறித்த நெருங்கிய தகவல்களை அறிந்தவராகவும், அவர் தனது திட்டம் என்ன என்பதை அறிந்தவரும், அவைகள் வெற்றிகரகமாய் நிறைவேறி வருவதை அறிகிறவருமாய் இருக்கிறார். வேதாகம தீர்க்கதரிசனங்கள், படிப்படியாய், தெள்ளத்தெளிவுடன் நிறைவேறி வருகிறதாய் இருக்கிறது. நமது கடமையானது, இந்த இறுதிகால சந்ததியில், வேதாகமத்தில் முன்னதாகவே கூறப்பட்ட நிகழ்வுகள், நிறைவறி வருகிறதை கண்கூடாய் காண வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இந்த புத்தகத்தின் நோக்கம், தனிப்பட்டவர்களுக்கும், சபையைக்கும், வேதாகம தீர்க்கதரிசனங்கள் குறித்து சவால் விடுவது ஆகும். இத்தகைய தீர்க்கதரிசனங்களைத் தேவன் கவனமாய் எடுத்துக்கொண்டு, 27% வேதாகமக் கருத்துக்களை இப்பாடத்தில் இடம்பெறுமாறு செய்துள்ளார்.

இப்புத்தகம் மூன்று பிரிவுகளாய் பிரிக்கப்பட்டு, சுமார் 200 குறிப்பிட்ட தீர்க்கதரிசனங்களில், 50 தீர்க்கதரிசனங்கள் நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் முதல் வருகையில் நிறைவேற்றி தீர்க்கப்பட்டாயிற்று. அதில் மற்ற 50 தீர்க்கதரிசனங்கள் சரித்திரப் பூர்வமாய் நிறைவேறித்தீர்ந்து இருக்கின்றன. மற்ற 100 தீர்க்கதரிசனங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்ததாய் நிறைவேற வேண்டியிருக்கிறது.

வேதாகமத்தின் 66 புத்தகத்தில், 31 புத்தகத்திலிருந்து 100 தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியுள்ளதைப் பரிசீலிக்கப்பட்டுள்ளது, இயேசுக் கிறிஸ்து முதலாம் வருகையில் குறிப்பாக ஆதியாகமம் முதற்கொண்டு பேதுருவின் முதலாம் நிரூபம் வரையுள்ள 24 புத்தகங்களில் உள்ள தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியுள்ளது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

வேதாகமத்தில் சில 330 தீர்க்கதரிசனங்கள் இயேசுக் கிறிஸ்துவின் முதலாம் வருகையை குறித்துக் கூறுகிறதாய் இருந்த போதிலும், அப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்களில் இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்தும் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது, ஆகையால் இப்புத்தகத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் முழுமையாய் எல்லாவற்றையும் குறித்துக் கூறாமல், தொகுக்கப்பட்டுள்ளது, எப்படியிருப்பினும், கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது மிகவும் சமீத்து வந்து கொண்டிருப்பது திண்ணம்.

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து முதன்முறையாக இவ்வுலகில் வந்து, இவ்வுலகில் வாழும் மனுக்குலத்தின் பாவத்திற்காக மரித்து, தன்னுடன் எந்நாளும் வாழும் சிலாக்கியத்தை அவர் அளித்தவராய் இருக்கிறார். யோவான் 3:16, அப்போஸ்தலர் 4:12, 16:31, 2 பேதுரு 3:9. வேதாகமம் கூறுகிறது, கர்த்தராகிய இயேசு இரண்டாம் முறை வருகிறபோது, அவர் வேறு விதமான நோக்கோடு வருகிறவராய் இருக்கிறார். உலகில் வசிக்கும் அனைவரையும் நியாயந்தீர்க்கும் நோக்கோடு அவர் திரும்ப வந்து, அவர் ஆயிரவருட அரசாட்சியை முடிவாக இப்பூமியில் நிறைவேற்றுகிறவராய் இருக்கிறார்.

இப்புத்தகத்தின் சுருக்கம், நிறைவேறின தீர்க்கதரிசனங்களை காண்பித்து, நிறைவேற இருக்கும் தீர்க்கதரிசனங்களை உறுதி செய்வதாய் இருக்கிறது:

1. எழுத்தின்படியே, எண்ணிக்கைக்கு அடங்கா வேதாகமத்தின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறித் தீர்ந்து இருக்கின்றன. இவ்வாறு நிறைவேறித்தீர்ந்த தீர்க்கதரிசனங்கள் எதிர்காலத்தில் நிறைவேற இருக்கும் தீர்க்கதரிசனங்கள் மூலம், எழுத்தின்படியே, இவ்வுலகை வடிவமைக்க இருக்கிறது.

2. இன்னும் நிறைவேற இருக்கும் வேதாகம தீர்க்கதரிசனங்களை படிப்பதன் மூலம், சம்பந்தமற்ற அநேக நிகழ்வுகளை நாம் காணும்போது, முன்னோக்கி காணும் நிகழ்வுகள் படிப்படியாக தீர்க்கதரிசன முன்னுரைத்தல் படியே, எதிர்காலத்தில் நிகழவிருக்கிறது என அறிவுறுத்துகிறதாய் இருக்கிறது.

3. இப்படிப்பட்டவைகள் நமது சந்ததியில் குவிந்து கொண்டு வருகிறபடியால், கிறிஸ்துவின் வருகையைக் காணும் பிரத்தியேக சந்ததியில் நாம் இருக்கிறோம் என்பதை நமக்குச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. இது ஒவ்வொருவரும் எச்சரிப்படைந்து, வரக்கூடிய நாட்களில் நிகழவிருக்கும் காரியங்களின் வளர்ச்சி படிப்படியாக முன்னேறி வருவதை அறிய வழி நடத்துகிறதாய் இருக்கிறது. விசுவாசிகளுக்கு, இது ஆறுதலின் ஆதாரமாய் இருந்து, தேவன் சரித்திரத்தில் முழுகட்டுப்பாட்டுடன் செயல்பட்டுவருகிறார் என்பதையும் அவர் வருகையானது முழு நிச்சயத்துடன் நிறைவேற இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

4. தீர்க்கதரிசனக் குவியல்கள் குறித்து தள்ளாடுகிற தன்மையின் வெளிச்சத்தில், எல்லா அவிசுவாசிகளும், கண்டிப்பாக திரும்ப வர இருக்கும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு தங்களை அற்பணித்துக் கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள், அவர் 2000 ஆண்டுகளுக்கு முன், இப்பூமியில் ஊழியம் செய்தது போன்றே, ஊழியம் செய்யும்படி வருகிறவராய் இருக்கிறார்.

முன்னுரை:

தேவன் அண்டசராசரத்தின் காலம், தூரம், [space & Time] இவற்றிற்கு அப்பாற்பட்டவராய் இருக்கிறார். நாமோ இவைகளுக்கு உட்பட்ட சிருஷ்டிகளாய் இருக்கிறோம். காலம், தூரம் இவற்றை சிருஷ்டித்தவராய் இருக்கிற தேவன், மட்டுமே தற்போதுள்ள அண்டசராசரத்தின், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் போன்றவற்றைக் குறித்த சிந்தனை உடையவராய் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. இது 21 ம் நூற்றாண்டில் வசிக்கும் நமது பாவத்திற்கான கிரயத்தை, 2000 ஆண்டுகளுக்கு முன்னாக கல்வாரி சிலுவையில் கிறிஸ்து கொடுத்துத் தீர்த்ததை நிரூபனம் செய்கிறதாய் இருக்கிறது.

தேவன் பரிசுத்த வேதாகமத்தில் அளித்துள்ள அநேக தீர்க்கதரிசனங்கள் மூலம், எதிர்காலத்தைக் குறித்த அறிவை மனுக்குலத்திற்கு அறிவிக்கிறவராய் இருக்கிறார். இது, தேவன் ஆதியாகமம் 6:3 ல், நோவா காலத்தில், ஜலப்பிரயளத்தினால், இவ்வுலகை நியாயத்தீர்ப்பு செய்ததன் மூலம் நிரூபனம் செய்யப்பட்டுள்ளது. நாம் ஆராதிக்கும் தேவன் சிருஷ்டிக்கர்த்தர், மற்றும் இரட்சகர் என்றும் நாம் நினைவு கூற வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவர் இவ்வண்டசராசரத்தை உருவாக்கினவர், ஒரு நாளில், இதை அழிவுக்கு என நியமித்துள்ளார். 2 பேதுரு 3:10-18. நமது சிந்தனைகள் அனைத்தும், காலம், தூரம் இவைகளுக்கு உட்பட்டதாய் இருக்கிறது. ஆகவே தேவன் முன்னுரைத்த தீர்க்கதரிசன வட்டாரத்திற்குள் தாழ்மையுடன் நுழைந்து ஆராய்ந்து பார்ப்போமாக, பெருமைய அகற்றித் தாழ்மைப்படுவோம். நாம் கர்த்தரின் பாதத்தில் தாழ்மையுடன் அமர்ந்து, அவரது உபதேசங்களை, அவரது இரத்தத்தினால் கழுவப்பட்ட நிலையில், எதிர்காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்களை ஆர்வத்துடன் கற்றுக்கொள்வோமாக.

மனுக்குலத்தின் முதல் நாகரிகத்தை, ஜலப்பிரயளத்தால் நிர்மூலமாக்கி கர்த்தர் நியாயத்தீர்ப்பு செய்திருக்க, இரண்டாம் தேவனது தெய்வீக உலக நியாயத்தீர்ப்பானது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிகழுவதாய் இருக்கிறது. மத்தேயு 25:31-46. தேவன், இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுடன் சம்பந்தப்பட்ட 1800 தீர்க்கதரிசனங்களை அளித்து இருக்கிறார், முதலாவது, இவைகளில் 330 தீர்க்கதரிசனங்கள் மூலம் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

இது ஒரு விசுவாசியை வேதாகம தீர்க்கதரிசன வெளிச்சத்தில், இவ்வுலகைக் குறித்து, தேவனது திட்டங்கள், எதிர்காலத்தில் நிகழவிருக்கும் தீர்க்கதரிசன நிகழ்வுகள் மூலம் நிதானிக்கச் செய்கிறதாய் இருக்கிறது. இதன் மூலம் தேவன் சரித்திர நிகழ்வுகள், எதிர்கால நிகழ்வுகள் இவைகளில் முழு கட்டுப்பாட்டுடன் இருக்கிறார் என்பதை இவைகள் தெளிவுபடுத்துகிறதாய் இருக்கிறது.

கிறிஸ்துவின் முதலாம் வருகை குறித்த 330 தீர்க்கதரினங்களின் முழுமையான நிறைவேறுதல் மூலம், தேவனது தீர்க்கதரிசனங்களின் மெய்த்தன்மை விளங்குகிறதாய் இருக்கிறது.

<u>எதிர்காலத் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறும் என்கிற நிச்சயம், கடந்தகால தீர்க்கதரிசனங்களை தேவன் நிறைவேற்றியுள்ளதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது.</u>

இப்புத்தகமானது இருபிரிவுகளாய் பிரிக்கப்பட்டு, எதிர்காலத் தீர்க்கதரிசனம், மற்றும் இறந்த கால தீர்க்கதரிசம் என வகையறுக்கப்பட்டுள்ளது. முதல் பாகத்தில், வேதாகம தீர்க்கதரிசனங்கள் இயேசுக் கிறிஸ்துவின் முதல் வருகையில் முழுவதும் நிறைவேறியுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவன் தீர்க்கதரிசனத்தை அளித்துள்ளபடியால், அவைகள் எழுத்தின் படியே, நிறைவேறும் என சரித்திர வல்லுனர்கள், மற்றும் இதர பட்டணத்தார் மற்றும் ஜனங்களால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் பகுதியில், இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்தத் தீர்க்கதரின நிறேவேறுதலுக்கான முன்னேற்றம் குறித்து பரிசீலனை செய்யப்படுகிறது. இது இந்த சந்ததியில் வாழும் நாம், கர்த்தராகிய இயேசு இரண்டாம் முறையாக இவ்வுலகிற்கு திரும்புவது, குறித்து சாட்சி பகர வேண்டியவர்களாய் இருக்கிறோம் என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

<u>காலத்தின் அடையாளங்களைப் பகுத்தறிதல்:</u>

இயேசுக்கிறிஸ்துவின் இரு வருகைகளைக் குறித்த வேதாகம தீர்க்கதரிசனங்கள் அதிகமாய் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், அவைகளின் நிறைவேறுதல் அவர் வருகை சமீபித்து வருகிறது என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

யூத மதத்தலைவர்கள், கர்த்தராகிய இயேசுவின் முதல் வருகையின் போது, மத்தேயு 16:3, கால நிலைகளைக் குறித்து மிகத்துள்ளியமாய் நிதானிக்கிறவர்களாய் இருந்தும், மேசியாவின் ஊழியத்தை மற்றும் அவரது ஆளத்துவத்தை சரியாய் பகுத்தறியக்கூடாதவர்களாய் இருந்தனர்.

லூக்கா 21:28 ல் கார்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மறு வருகை குறித்து, தீர்க்கதரிசனங்கள் கூடிய விரைவில் அது நிகழவிருக்கிறது என எடுத்துரைப்பதை நாம் காண்கிறோம்.

இஸ்ரவேல் மதத் தலைவர்கள், இயேசுக்கிறிஸ்துவின் முதல் வருகை நிகழ்வின் போது, தவறவிட்டது போன்று, நாம் தவறவிடாது, அடையாளங்களை இனக்கண்டுகொண்டு, இரண்டாம் விஷேசித்த சந்ததியாகிய நாம் ஜாக்கிரதையுடனும், விழிப்புடனும் காணப்படுவோமாக.

இரட்சிப்பு குறிப்பிட்ட கால எல்லைக்குள் மட்டுமே, கிடைப்பதாய் இருக்கிறது:

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை குறித்து, பரவலான கண்ணோட்டம் இருந்து வருகிறது, என்பது ஒத்துக்கொள்ளக்கூடிய ஒன்றாய் இருந்து வருகிறது. அவர் வருகையின் முக்கிய அம்சம் என்னவெனில், அவர் அனைத்து மனுக்குலத்தையும் தனித்தனியே நியாயம் விசாரிக்க இருக்கிறார். அவிசுவாசிகள் அவர் சமூகத்திலிருந்து அகன்று போவர், விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்பட்டு, அவருடன் இருப்பர்.

இயேசுக்கிறிஸ்துவின் வருகையின் போது, அவிசுவாசிகளின் இரட்சிப்பின் தருணம் நிறைவு பெறுகிறதாய் இருக்கிறது. இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் வசிக்கும் சகல அவிசுவாசிகளின் இரட்சிப்பின் காலம் முடிவுக்கு வருகிறதாய் இருக்கிறது, <u>இரட்சிக்கப்படுவதற்கான தருணம் குறிப்பிட்ட காலவரையரை மட்டுமே என்பது விளங்குகிறதாய் இருக்கிறது.</u>

இக்காலத்தில், ஒரு குறிப்பிட்ட சந்ததிக்கு மட்டும் திடீரென எவ்வாறு முன்குறிக்கப்பட்ட நிகழ்வு, நிறைவேற சாத்தியமாகும்? இதற்கான பதில், இது தேவனது திட்டமாய் இருக்கிறது!

தேவன் முழு சரித்திர நிகழ்வுகளுக்கும் பொறுப்பாளராய் இருக்கிறார், அவர் எல்லா நிகழ்வுகளும் பயங்கர அழிவுகாலத்துக்கு வழிநடத்துகிறது என்பதை அறிந்து இருக்கிறார்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது, இரண்டாம் வருகை தீர்க்கதரிசனமானது பரிசீலனை செய்யப்பட்டு, உண்மையாய் எழுத்தின் படி அவர் வருகையானது நிறைவேறிற்றா? என ஆய்வு செய்யப்பட்டது. இந்த 2015 ம் ஆண்டில், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மாறிவருகின்றன, எழுத்தின்படி அனைத்து தீர்க்கதரிசனங்களும் நிறைவேற இருக்கின்றன. **70 ஆண்டு காலங்கள் வாழ்ந்து மரிக்கும் வேதாகம சந்ததியினால் என்னமாற்றத்தை கொண்டுவர இயலும்?**

தானியேல் 12:8-10 ல், இக்காலத்தில் நிறைவேற இருக்கும் காரியங்களை நாம் காணக்கூடியதாய் இருக்கிறது. தானியேலின் இக்காரியங்கள் முத்திரையிடப்பட்டு மறைக்கப்பட்ட இரகசியமாய் இருந்தது, இக்கடைசி காலத்தில் நம் கண்களுக்கு புலப்படும் வண்ணம் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது. இக்கடைசிகாலத்தில், அவைகள் அனைத்தும் பகுத்துணரப்பட்டு, ஞானவான்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாய் இருக்கிறது. நாம் வாழும் இக்காலகட்டத்தில், ஞானமுள்ளவர்களாய் காலங்களை குறித்து பகுத்தாராய்வு செய்து, புரிந்து கொள்ள முயலுவோமாக.

சரித்திரத்தில் முதன்முறையாக நாம் தீர்க்கதரிசனங்களை எழுத்தின்படியே நிறைவேறியுள்ளதை அறியக்கூடிய சந்ததியாய் இருக்கிறோம். தானியேல் புத்தகத்தின் மறைவான தீர்க்க தரிசன காரியங்கள் இப்பொழுது திரை நீக்கம் செய்யப்பட்டு, நமது கண்களுக்கெதிரே பிரத்தியட்சமாய் இருக்கிறது. இத்தீர்க்கதரிசனமானது, வேதாகமத்தின் மற்ற தீர்க்கதரிசனங்களுடன் நிறைவேறி வருகிறதாய் இருக்கிறது.

வேதாகமத்தில் 100 வேதாக தீர்க்கதரிசனங்கள் மறு பரிசீலனை செய்யப்பட்டு, சுமார் 70 ஆண்டு காலமாக, எழுத்தின்படியே நிறைவேறி வருவனவற்றை இனங்கண்டுகொள்ளப்பட்டு வருகிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த இத்தீர்க்கதரிசனங்கள் சம்பந்தமான காரியங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வரப்படுகிறது. இப்புத்தகத்தில் இரண்டாம் கட்ட நிகழ்வுகள் முக்கியப்படுத்திக்காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

<u>தேவனின் குணாதிசயங்கள்:</u>

வேதாகம தீர்க்கதரிசனங்கள் அனைத்தும், தேவனது குணாதிசயத்தின் அடிப்படையைச் சார்ந்து இருக்கின்றன. தேவனது குணாதிசயத்தை பரிசீலனை செய்யும் போது, மனிதனுடன் அவருக்குள்ள உறவானது, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் காரியங்கள் குறித்த தீர்க்கதரிசனத்தை தமது வார்த்தை மூலம் வெளிப்படுத்தியுள்ளது தெளிவாகிறது.

தேவன் சர்வவல்லமையுள்ளவராய் இருக்கிறார், அவர் இராஜாதி இராஜாவாய் இருக்கிறார். ஒருவரும் கெட்டுப்போகாதபடிக்கு அவர் அவர்களைக் குறித்து சித்தமுள்ளவராய் இருக்கிறார். 2 பேதுரு 3;9.

தேவன் முழுமையான நீதிபரராய் இருக்கிறார், அவர் வழிகள் அனைத்தும் பூரணமானதாய் இருக்கிறது. பூரணமற்றவராய் இருத்தல் என்பது அவருக்கு அசாத்தியமான ஒன்றாய் இருக்கிறது.

தேவன் முழுமையாய் நியாயம் செய்கிறவராய் இருக்கிறார்: -- ஒருவரும் தேவன் அநியாயம் செய்கிறார் என அவரைக் குறித்து குற்றம்சாட்ட இயலாது. மனுக்குலத்தால் அடைய இயலாத

அளவுக்கு தேவன் பரிசுத்தராயும், அவரது நீதி மற்றும் அவரது நியாயங்கள் மனிதரது எண்ணங்களுக்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது. மனிதன் தான் செய்யும் எல்லா காரியங்களிலும் அவன் பூரணனாக இல்லை, தேவனது பூரணத்துக்கு ஏதுவாய் அவனால் எதையும் செய்ய இயலாத அளவுக்கு அவன் குறைவுபட்டவனாய் இருக்கிறான். நம்மை இரட்சிக்க ஆவலாய் உள்ள தேவனிடமிருந்து நாம் வேறுபிரிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறவர்களாய் இருக்கிறோம். தேவன் கிருபையின் மூலம், கிறிஸ்துவில் நமக்கு வழி உண்டாக்கி இருக்கிறார்.

தேவன் முழுமையான அன்பு உடையவராய் இருக்கிறார்: -- மனுக்குலம் அனைத்திலும், ஒரே பூரண புருஷராய் இருந்து, சிலுவையிலே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, மனிதர் அனைவருக்காகவும் கிரயம் செலுத்தினார். யோவான் 3:16. இதுவே தேவன் மனுக்குலத்தை இயேசுகிறிஸ்து மூலமாய் அன்பு கூறுவதற்கு அனுமதித்தது.

தேவன் நித்திய ஜீவனாய் இருக்கிறார். -- தேவன் எப்பொழுதும் நிலைத்திருக்கிறவராய் இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் கிரியைகளில் நாம், நம்பிக்கை வைப்பதன் மூலம், நித்திய ஜீவனை நாம் பெற்றுக்கொள்கிறவர்களாயிருக்கிறோம். நாம் தேவனது வழியை ஏற்றுக்கொள்ள மறுப்போமானால், நியாயத்தீர்ப்புக்கு உள்ளாகிறவர்களாயிருக்கிறோம். யோவான் 3:36.

தேவன் சர்வ வல்லமையுள்ளவராய் இருக்கிறார்: -- தேவனது சித்தத்திற்கு விரோதமாய் ஒருவரும் செல்வதில்லை, எப்பொழுதும் தேவனே வெற்றிபெறுகிறவராய் இருக்கிறார்.

தேவன் சர்வ வியாபகியாய் இருக்கிறார்: -- தேவன் எல்லா நேரங்களிலும், எல்லா இடத்திலும் இருக்கிறவராய் இருக்கிறார், அவரை தடை செய்ய ஒருவராலும் இயலாது.

தேவன் சர்வ ஞானியாய் இருக்கிறார்: -- அவரை ஆச்சரியத்திற்குள்ளாக்குவது என ஒன்றுமில்லை. அவர் கடந்த கால நித்தியத்திலிருந்து ஒவ்வொன்றையும் முழுமையாய் அறிந்து வைத்து இருக்கிறார்.

தேவன் மாறாதவராய் இருக்கிறார்: -- தேவன் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் இருக்கிறார். இது வேதாகம தீர்க்கதரிசனங்கள், மற்றும் வாக்குத்தத்தங்களுக்கு பொருந்துகிறதாய் இருக்கிறது.

தேவன் முற்றிலும் சத்தியபரராய் இருக்கிறார்: -- இது சத்திய வார்த்தையை முற்றிலும் சார்ந்திருக்கச் செய்கிறதாய் இருக்கிறது. மற்றும் அதன் மீது முழுமையான நம்பிக்கை வைக்கும்படி செய்கிறது.

இரட்சிப்பு என்பது எல்லோருக்கும் உரியதாய் இருக்கிறது, ஆனால் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் கிரியைகளை விசுவாசித்து, தனது சுயக்கிரியைகளை விட அவைகளில் நம்பிக்கை வைப்பதே இரட்சிப்புக்கு பெலன் செய்வதாய் இருக்கிறது. இரட்சிப்பிற்கு மனித முயற்சிகள், தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவது இல்லை.

மற்ற மதங்கள் மற்றும் அவர்களது கொள்கைகள் அனைத்தும், கிரியைகளின் அடிப்படையில் இயங்கி வருகிறது. அல்லது தனிப்பட்ட முயற்சியின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. யோவான் 14:6. தேவனுடன் நித்திய உறவு கொள்ள இயேசுகிறிஸ்துவே வழியாய் இருக்கிறார்.

வேதாகம தீர்க்கதரிசனங்களின் நோக்கம், எந்த ஒரு நிகழ்வுக்கும் குறிப்பிட்ட நாளைக் கொடுப்பது அல்ல. அவை ஒவ்வொன்றும் பிழையின்றி தேவனின் தனிசிறப்பு வாய்ந்தவைகளாய் இருக்கின்றன.

அவர் வருகைக்கு முன் சமயமானது நெருங்கி வந்து கொண்டு இருக்கிறது. அதினிமித்தம், தற்போது நிகழும் காரியங்களும், தேவனது திட்டமும் ஒவ்வொன்றுக்கு சம்பந்தமுள்ளதாய் இருக்கிறது, இது இருள் சூழ்ந்த காலத்தில் விசுவாசியை உற்சாகப்படுத்துகிறதாய் இருக்கிறது.

பகுதி 1 இயேசுக் கிறிஸ்துவின் முதல் வருகையின் போது நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்

தீர்க்கதரிசனம்	வேதபகுதி	கிறிஸ்துவினால் நிறைவேறினவைகள்
பெத்லெகேமில் இயேசுவின் பிறப்பு	மீகா 5:2	மத்தேயு 2:5,6
வெகுமதிகள் அளிக்கப்படுதல்	ஏசாயா 60:1-6	மத்தேயு 2:1,11
குழந்தைகள் படுகொலை செய்யப்படுதல்	எரேமியா 31:15	மத்தேயு 2:17,18
கன்னிகை பிறப்பு	ஏசாயா 7:14	மத்தேயு 1:22,23
நசரேயன் என அழைக்கப்படுதல்	ஏசாயா 11:1	மத்தேயு 2:23
உவமைகளைக் கொண்டு பேசுதல்	சங்கீதம் 78:1,2	மத்தேயு 13:34,35
குணமாக்கும் ஊழியம்	ஏசாயா 35:4-6	லூக்கா 7:22
கலிலேயாவிலிருந்து வருதல்	ஏசாயா 9:1,2	மத்தேயு 4:13-16
தேவாலய சுத்திகரிப்பு	ஏசாயா 56:7	லூக்கா 19:45,46
முதல் வருகையின் ஊழியம் குறித்த தீர்க்கதரிசனம்	ஏசாயா 61:1-2	லூக்கா 4:16-21
போதிக்கும் முறைமை	ஏசாயா 42:1-3	மத்தேயு 12:17-20
போதனை புறக்கனிக்கப்படல்	ஏசாயா 6:9.10	அப். 28:25-27
தேவ குமாரன்	சங்கீதம் 2:7	எபிரெயர் 5:2
மனுஷ குமாரன்	சங்கீதம் 8:4-6	எபிரெயர் 2:6-9
தீர்க்கதரிசி	உபாகமம் 18:15-19	அப். 3:22,23
ஆசாரியர்	சங்கீதம் 110:4	எபிரெயர் 7:17-21
இராஜா	சங்கீதம் 45:6,7	எபிரெயர் 1:8,9
இருக்கிறவாகவே இருக்கிறேன்	யாத்திராகமம் 3 :14	யோவான் 8:58
இரட்சகர்	ஏசாயா 40:6-8	எபிரெயர் 10:5-10
ஆவியானவரால் ஆட்கொண்டு நடத்தப்படல்	ஏசாயா 11:1,2	மாற்கு 1:10,11
சாந்தம்	ஏசாயா 53:7-8	அப். 8:32-35
சிருஷ்டிகர்	சங்கீதம் 102:25-27	எபிரெயர் 1:10-12
முன்னதாகவே இருத்தல்	மீகா 5:2	யோவான் 8:58
பாவமற்றத் தன்மை	ஏசாயா 53:9-10	1 பேதுரு 2:21-22
உண்மையாய் இருத்தல்	புலம்பல் 3:22-23	1 தெச. 5:24
தள்ளப்பட்ட கல்	சங்கீதம் 118:22-23	அப். 4:10-11

யூதர்களால் புறக்கணிக்கப்படல்	ஏசாயா 8:14	ரோமர் 9:32-33
எருசலேமுக்குள் பவனி செல்லுதல்	சகரியா 9:9	மத்தேயு 21:4,5
இராஜாவாக வரவேற்கப்படல்	சங்கீதம் 118:25,26	யோவான் 12:12,13
தனது சீஷர்களால் கைவிடப்படுதல்	சகரியா 13:7	மாற்கு 14:27
சிநேகிதனால் காட்டிக்கொடுக்கப்படுதல்	சங்கீதம் 41:9	யோவான் 13:18-27
பொய் சாட்சிகள்	சங்கீதம் 35:11	மத்தேயு 26:59-61
மோசேயினால் உயர்த்தப்பட்ட சர்ப்பம்	எண்ணா. 21:7-9	யோவான் 3:14,15
30 வெள்ளிக்காசும் & குயவனின் நிலமும்	சகரியா 11:12,13	மத்தேயு 27:3-10
முகத்தில் காரி துப்புதல்	ஏசாயா 50:6	மாற்கு 14:65
குற்றம் சாட்டுகிறவர்கள் முன் அமைதியாய் இருத்தல்	ஏசாயா 53:7	மத்தேயு 27:12-14
சிலுவையில் கதறுதல்	சங்கீதம் 22:1	மத்தேயு 27:46
கைகளிலும், கால்களிலும் உருவக் குத்துதல்	சங்கீதம் 22:18	மத்தேயு 27:35
குற்றவாளிகளில் ஒருவராக எண்ணப்படல்	ஏசாயா 53:12	மாற்கு 15:28
உயிர்த்தெழுதலில் யோனாவின் அடையாளம்	மத்தேயு 12:40	1 கொரிந்தியர் 15:4
முள்ளாலான கிரீடம்	யோனா 2:5	மத்தேயு 27:29
வஸ்திரத்தை பங்கிடல்	சங்கீதம் 22:18	யோவான் 19:23,24
எலும்புகள் முறிக்கப்படுவதில்லை	யாத்திராகமம் 12:46	யோவான் 19:31-33, 36
சிலுவையில் தாகமாயிருத்தல்	சங்கீதம் 69:21	யோவான் 19:28-30
மற்றவர்களுக்காக மரித்தல்	தானியேல் 9:25-26a	எபிரெயர் 1:3
சிலுவையில் உண்டான காரிருள்	ஆமோஸ் 8:9	மத்தேயு 27:45
ஐசுவரியவானின் கல்லறை	ஏசாயா 53:9	லூக்கா 23:50-53
உயிர்த்தெழுதல்	சங்கீதம் 16:10	அப். 2:25-31
பரமேறுதல்	சங்கீதம் 68:18	எபேசியர் 4:8-10
பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருத்தல்	சங்கீதம் 110:1	எபிரெயர் 1:13

கருத்துரை:

இந்த 50 தீர்க்கதரிசனங்களைப் பார்க்கும்போது, கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு மற்றும் உயிர்த்தெழுதல் இவைகளைத் தவிர்த்து, மற்ற தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் முழுமையானதாய் இருக்கிறது. விஞ்ஞானிகள் பொதுவாக இத்தீர்க்கதரிசனங்களை ஏற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர், சரித்திரத்தில் இப்படிப்பட்ட முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களின் படி முழுமையாய் நிறைவேற்றினவர்கள் ஒருவருமிலர்.

கீழ்க்கண்ட தீர்க்கதரிசனத் தெரிவுகள், சரித்திர ரீதியில் நிறைவேறியது இயேசுகிறிஸ்துவை, எவ்விதத்திலும் இவைகள் பாதிக்கவில்லை:

SELECTION OF PROPHECIES NOT AFFECTING JESUS CHRIST FULFILLED HISTORICALLY

தீர்க்கதரிசனம்	வேதபகுதி	நிறைவேறிய வேதபகுதி
ரூபன் நிலையற்றவனாயிருப்பது	ஆதி.. 49:3,4	எண்ணாகமம் 26:5-11
தேசத்தில் லேவிக்கு இடம் ஒதுக்கப்படாதது	ஆதி. 49:5-7	யோசுவா 21:4-7h
யூதா அரசாளும்படி ஏற்படுத்தப்படுவது	ஆதி. 49:8-12	யோசுவா 15:1
தாண் விக்கிரக ஆராதனைக்கு வழி நடத்துவது	ஆதி..49:16-18	யோசுவா 19:40-48
காத் யுத்த வீரராய் இருப்பது	ஆதி. 49:19	1 நாளாகமம் 5:18-20, 12:8
ஆசேர் ஐசுவரியமுள்ள தேசத்தைப் பெற்றிருப்பது.	ஆதி. 49:20	Historic including recent oil சரித்திர நிகழ்வு மற்றும் சமீபத்திய எண்ணெய் கிணறுகள்
நப்தலி நற்செய்தியைப் பரப்புவது.	ஆதி. 49:21	மத்தேயு 4:13-15
யோசேப்பு பெரிதான ஆசீர்வாதங்களைப் பெறவிருப்பது.	ஆதி. 49:22-26	உபாகமம் 33:13-17
பெஞ்சமின் கொடூரமான கோத்திரமாய் இருக்கவிருப்பது.	ஆதி. 49:27	நியாதிபதிகள் 19, 20:21-47
யோசுவாசும் காலேபும் வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசிப்பது.	எண். 14:24	யோசுவா 3:7, 17, 14:6-12
சிசெரா ஒரு பெண்ணால் தோற்கடிக்கப்படல்.	நியாதி 4:9	நியாதிபதிகள் 4:21
ஓப்னி மற்றும் பினெகாஸ் ஒரே நாளில் மரணமடைவது.	1 சாமு. 2:34	1 சாமுவேல் 4:11
ஏலியின் வம்சத்தைவிட்டு ஆசாரியத்துவம் அகற்றப்படல்.	1 சாமு. 2:27-36, 3:11-14	1 இராஜாக்கள் 2:26-27
ஒரு குறிப்பிட்ட நாளில் சவுல் யுத்தத்தில் மடிந்து போதல்.	1 சாமு. 28:19	1 சாமுவேல் 31:1-6
தேவாலயத்தைகத் தாவீது கட்டாது சாலொமோன் கட்டுதல்.	1 நாளா. 17:1-12	1 இராஜாக்கள் 7:51
யெசபேல் காட்டு நாய்களால், திண்ணப்படுதல்.	1 இராஜா 21:23	2 இராஜாக்கள் 9:30-37
எலிசா இரண்டத்தனையாகப் பெற்றுக்கொள்ளுதல்.	2 இராஜா 2:9	எலிசாவின் அற்புதம் இரண்டு மடங்கு நிகழ்தல்
நாமான் குஷ்டரோகத்திலிருந்து குணமாதல்.	2 இராஜா 5:3, 8, 10	2 இராஜாக்கள் 5:14

யோவாஸ் மூன்றுமுறை அசீரியரை தோற்கடித்தல்.	2 இராஜா 13:18-19	2 இராஜாக்கள் 13:25
சனெகெரிப் தனது சொந்த தேசத்தில் கொலை செய்யப்படல்.	ஏசாயா 37:7	ஏசாயா 37:37-38
கோரேஸ் யூதர்களை எருசலேம் செல்ல அனுமதித்தல்.	ஏசாயா 44:28	எஸ்றா 1:1-2
கோனியா இராஜரீக சந்ததியிலிருந்து அகற்றப்படல்.	எரேமியா 22:28-30	சரித்திர ரீதியான கன்னிகைப் பிறப்பு.
நெபுகாத்நேச்சாருக்கு மிருகத்தின் இருதயம் அளிக்கப்படல்.	தானி. 4:19-27	தானியேல் 4:28-37
பெல்ஷாத்சாரின் இராஜ்ஜியம் அகற்றப்படல்.	தானி. 5:5, 25-28	தானியேல் 5:30
மகா உலக சாம்ராஜ்ஜியத்தின் அலெக்ஸாண்டர்.	தானி. 2:32-39, 7:6, 8:5-8, 21, 11:3	சரித்திரம்
அலெக்ஸாண்டர் பெரிசியரை தோற்கடித்தல்.	தானியேல் 8:5-8	சரித்திரம்
சாம்ராஜ்ஜியத்தின் எதிர்காலம்.	தானியேல் 11:4	Four generals out of eleven பதினோறு தளபதிகளில் நான்கு தளபதிகள்
வடைராஜ்ஜியத்தின் இராஜா தென் திசை இராஜாவைக் காட்டிலும் அதிகம் பெலப்படுதல்.	தானியேல் 11:5	Seluchus I and Ptolemy I செலுாயக்கஸ்-1 & டாலமி-1.
இராஜாத்தியின் படுகொலை	தானியேல் 11:6	Laodice murders Bernice லவோதிக்கேயாள், பெர்னிஸை கொலை செய்தல்.
Zenith of Power in South தென்திசையில் ஜெனித்தின் வல்லமை	தானியேல் 11:7	Ptolemy III supreme டாலமி 3 ன் உன்னத நிலை.
Booty retrieved for Egypt எகிப்திற்காக திரும்ப கொள்ளையிடல்.	தானியேல் 11:8	300 yrs after Persian looting பெரிசிய கொல்லைக்கு 300 ஆண்டுகளுக்குப் பின்.
Return of Southern King தென்திசை இராஜா திரும்பவருதல்.	தானியேல் 11:9	Ptolemy III returns to Egypt டாலமி -3 எதிப்துக்குத் திரும்புதல்.
Arms race in the North வடதிசை சேனைகளின் பந்தயம்	தானியேல் 11:10	Seluchus III & Antiochus III செலுாயக்கஸ் - 3 & அந்தியோகஸ் - 3.
North and South fight வட இராஜ்ஜியம், தென் இராஜ்ஜியம் யுத்தம்.	தானியேல் 11:11	Battle of Raphia 217 BC ர ஃபியாவின் யுத்தம் 217 கி பி.
Revolts in the South தென் இராஜ்ஜியத்தில் உள்நாட்டுக்கலகம்	தானியேல் 11:12	Ptolemy IV causes trouble டாலமி - 4 கலகத்துக்கு காரணமாதல்.
North re-arms and becomes rich வட இராஜ்ஜியம் இராணுவ பலத்தை பெருக்குதலும், ஐசுவரியமடைதலும்.	தானியேல் 11:13	Antiochus III becomes rich டாலமி-3 ஐசுவரியவனாதல்.

North assisted by the Jews வட இராஜ்ஜியம் யூதரால் உதவி பெறுதல்.	தானியேல் 11:14	Conquers Palestine 199 BC பாலஸ்தீனாவை வெற்றி காணுதல் 199 கி பி.
North invades a weak South வட இராஜ்ஜியம் பலவீன தென் இராஜ்ஜியத்தின் மீது படையெடுத்தல்.	தானி. 11:15-16	Antiochus III defeats Egypt அந்தியோகஸ் -3 எகிப்தை தோற்கடித்தல்
North tries to spy on the South வட இராஜ்ஜியம், தென் இராஜ்ஜியத்தை வேவு பார்க்க முயலுதல்.	தானியேல் 11:17	Unsuccessful அப ஜெயம்.
Rome defeats the North ரோம சாம் இராஜ்ஜியம் வட இராஜ்ஜியத்தை தோற்கடித்தல்.	தானியேல் 11:18	Scipio Asiaticus wins battle ஸ்கிபியோ ஆசியாடிகஸ் யுத்தத்தில் ஜெயம் பெறுதல்.
North bankrupted by Rome வட இராஜ்ஜியம் ரோம சாம்ராஜ்ஜியத்தால் திவாலாக்கப்படுதல்.	தானியேல் 11:19	Reparations by Rome ரோமினால் இழப்பு சரி செய்யப் படுதல்.
North raises high taxes அதிகப்படியான வரியை வட இராஜ்ஜியம் உயர்த்தியது.	தானியேல் 11:20	Reign of taxman short! டாக்ஸ்மேன் ஷார்டின் ஆழுகை
Prototype Abomination/Desolation மூல முன்மாதிரியான பாழாக்கும் அருவருப்பு:	தானி. 11:21-34	தேவாலயத்தில் ஜீயஸின் சிலை.
Zacharias to be mute until birth யோவான் ஸ்நானகனது பிறப்பு வரை, சகரியா ஊமையாய் இருத்தல்	லூக்கா 1:20	லூக்கா 1:57-64
Simeon to see Messiah pre death மேசியாவின் மரணத்தை முன்னதாக சிமியோன் பார்த்தல்	லூக்கா 2:25-26	லூக்கா 2:28-30
Peter would deny Jesus Christ பேதுரு இயேசுக் கிறிஸ்துவை மறுதலித்தல்	யோவான் 13:38	யோவான். 18:24-27
Peter to die as a martyr பேதுரு இரத்தசாட்சியாய் மரித்தல்	யோ. .21:18-19, 2 பேதுரு 1:12-14	சரித்திரத்தில்
Judas to give himself over to Satan யூதாஸ் ஸ்காரியோத், சாத்தானுக்குத் தன்னை அற்பணித்தல்	யோவான் 6:70	ரோமர். 13:27
Paul would minister to the Gentiles பவுல் புறஜாதியாருக்கு ஊழியம் செய்தல்	அப். 9:15	ரோமர் 11:13
Paul would go to Rome பவுல் ரோமாபுரிக்கு செல்லுதல்.	அப். 23:11	அப். 28:16

சரித்திரத்திர தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியதை மேலே கண்டோம். அவைகளில் 17 தீர்க்கதரிசனங்கள் தானியேல் 11 ம் அதிகாரத்தில் இடம்பெற்றதாயும், கி.மு 538 லிருந்து கி மு 331 மகா அலெக்ஸாண்டர் மரணம் வரை இடைபட்ட காலமாகிய சுமார் 300 ஆண்டு காலங்களில் நிகழ்ந்த சம்பவமாய் இருக்கிறது. தானியேல் தீர்க்கதரிசன புத்தகம் செப்துவஜிந்த் கிரேக்க மொழிபெயர்ப்பின் போது, சரித்திர காலத்தில் அரசாண்ட டாலமி 2 மற்றும் பிலெதெல்பஸ் (284-287 கிமு) போன்றவர்களின் வேதாகம காலத்தினைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

இந்தப்பட்டியலானது, மற்ற சரித்திர தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியுள்ளதையும் காட்டுகிறதாய் இருக்கிறது. வேதாகம தீர்க்கதரிசனங்கள், சார்ந்து இருக்கக்கூடியவைகளும், மிகவும் துள்ளியமாய் நிறைவேறினவைகளுமாய் இருக்கிறது. [See book 128 for amplification of Daniel 11 and refer to the Commentary on Daniel on EBCWA website or CDs.]

சமூக நாகரிக முன்னேற்றமும் உலகலாவிய தெய்வீக நியாத்தீர்ப்பும்:

மனித சரித்திரமானது, வேதாகம காலங்களைக் கொண்டு பிரிக்கப்பட்டு, சமூக நாகரிகம் என அழக்கப்படுகிறது.

விளக்கம்:

சமூக நாகரிகம் விசுவாசிகளை மட்டும் கொண்டு துவ'ங்கி, உலகலாவிய நியாயத்தீர்ப்பில் முடிவடைகிறதாய் இருக்கிறது.

ஆதாம் முதற்கொண்டு இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை இரு சமூக நாகரிகம் காணப்படுகின்றன, மூன்றாம் நாகரிகமானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை முதற்கொண்டு பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வரை இடம்பெறுவதாய்க் காணப்படுகிறது. வெளி. 20:11-15.

நாம் வெளிப்படையாக இரண்டாம் சமூக நாகரிகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

சமூக நாகரிகம் 1 ஆதாமின் அறியாமை காலந்துவங்கி, உலக நியாயத்தீர்ப்பாகிய ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டது வரை இந்த நாகரிகம் நீடிக்கிறதாய் இருக்கிறது. எல்லா அவிசுவாசிகளும் அழிக்கப்பட்டு, நோவா அவனது குடும்பத்தாராகிய எட்டுப்பேர் மட்டும் பாதுகாக்கப்பட்டனர். இப்படிப்பட்ட விசுவாசிகளைக் கொண்டு, இரண்டாம் சமூக நாகரிகம் ஆரம்பமானது.

உலக ஜனத்தொகைய கி.மு 2400 ல் கணக்கிடுவோமெனில், ஜலப்பிரயளத்தில் தப்பி மீந்த எட்டு பேர் மாத்திரம் கணக்கிடப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

தேவனது முதல் சமூக நாகரிகத்தை நியாத்தீர்த்த போதுள்ள எச்சரிப்பு:

இப்படிப்பட்ட எச்சரிப்பு ஆதியாகமம் 6 ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் 120 நீண்ட ஆண்டுகாலங்கள், வர இருக்கும் நியாயத்தீர்ப்பை குறித்து எச்சரித்து வந்தார். இப்படிப்பட்ட அழிவை தேவன் விரும்பவில்லை என 2 பேதுரு 3:9 ல் காண்கிறோம்.

முதல் சமூக நாகரிகத்தின் போது, விசுவாசிகளுக்காக அளிக்கப்பட்ட பராமரிப்பு:

ஜலப்பிரளயத்திற்கு தப்பிக்கொள்ள பேழை உண்டாக்க விபரங்கள் அளிக்கப்பட்டு, வரவிருக்கும் நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கொள்ளும் பராமரிப்பு அளிக்கப்பட்டது. இதனால், விசுவாசிகள் தெய்வீகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு, நியாயத்தீர்ப்புக்கு தபிக்கொள்ளும் போக்கை தேவன் அவர்களுக்கு அளித்தார். இது விசுவாசிகளுக்கு தேவன் அளித்த கரிசனையைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

சமூக நாகரிகம் 2:

சமூக நாகரிகம் 2 ன் போது தேவனின் எச்சரிப்பு:

கர்த்தரின் இரண்டாம் வருகை உட்பட, 1800 வேதாகம தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டு நீண்டகாலமாய் இந்நாகரிகத்துக்கு உட்பட்டோர் எச்சரிக்கப்பட்டு வருகின்றனர். நமது சந்ததியில், இரண்டாம் உலக மகா யுத்தம் முதல், சுமார் 2000 ஆண்டுகாலங்களாய் இத்தீர்க்கதரிசனங்கள், நிறைவேறி, எழுத்தின்படியேயும், உண்மையான நிகழ்வாகவும் நிகழ்ந்து வருகின்றன. தானி. 12:8-10.

முதலாவது சமூக நாகரிகத்தின்படி அல்லாது, உலகலாவிய தெய்வீக நியாயத்தீர்ப்பானது, இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, பல பெரிய நியாயத்தீர்ப்புகள் தொடர்ந்து நிகழவிருக்கிறது.

கடைசி காலங்கள் நெருங்கிவருகிற காலகட்டத்தில், சாத்தானும், அவனது பிரஜைகளும், தீமையின் உச்சக்கட்டங்களை எட்டிவருகின்றனர், இவைகளையும், தெய்வீக நியாயத்தீர்ப்பையும் நாம் வேறுபிரித்து விளங்கிக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். 2 தீமோ. 3:1-4.

உலகலாவிய தெய்வீக நியாயத்தீர்ப்பானது, வெளிப்படுத்தின விஷேசத்தில், 7 முத்திரைகளின் நியாயத்தீர்ப்பு, 7 எக்காளங்களின் நியாயத்தீர்ப்பு, மற்றும் 7 கோப கலசங்களின் நியாயத்தீர்ப்பு எனச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

இரு குழுக்கள்:

இரண்டாம் சமூக நாகரிகத்தின் போது, இருவிதமான விசுவாசிகளின் குழுக்கள் இதில் உட்படுகிறவர்களாய் இருக்கின்றனர். தெய்வீக நியாயத்தீர்ப்புக்கு முன்னர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை நம்பும் விசுவாசிகள், மற்றும் நியாயத்தீர்ப்பின் போது, அவரை நம்பும் விசுவாசிகள் என இரு சாராராக பகுக்கப்படுகின்றனர்.

முதல் குழுவினர்:

இக்குழுவினர் சபை என அழைக்கப்படுகின்றனர். இதில் கி பி 32 பெந்தெகொஸ்தே பண்டிகை முதல், இந்நாள் வரையுள்ள சபை விசுவாசிகள் அடங்குவர். சபையானது கிறிஸ்துவின் சரீரம் என அழைக்கப்படுகிறது, இது கிறிஸ்துவின் கன்னிகை மணவாட்டியாய் இருக்கிறது, கிறிஸ்து நமது மணவாளராய் இருக்கிறார்.

நோவா காலத்து நிகழ்வுகளை உறுதிப்படுத்தும் வண்ணமாய், கிறிஸ்துவின் சரீரமான சபையானது, உலகலாவிய தெய்வீக நியாயத்தீர்ப்புக்கு முன்னதாய் அகற்றப்படுவதாய் இருக்கிறது. கிறிஸ்துவை தங்களது இரட்சிப்பிற்காய் நம்பும் சபை அங்கத்தினர் அனைவரும், நியாயத்தீர்ப்புக்கு

முன்னதாகவே எடுத்துக்கொள்ளப்பட்டு விடுவர். ரோமர் 8:1, "கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை."

குறைந்தபட்சம் 21 தெய்வீக நியாயத்தீர்ப்புகள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக நிகழ வேண்டியதாய் இருக்கின்றன. தேவன் ரோமர் 8 ம் அதிகாரத்திற்கும், மற்றும் இதர வேதபகுதிக்கும் முறண்படுகிறவராய் தெய்வீக நியாயத்தீர்ப்பு செய்கிறவராய் விளங்குகிறார். இப்படிப்பட்ட தெய்வீக நியாயத்தீர்ப்பில் சபையானது ஒரு அங்கமாய் இருக்கப்போவதில்லை என்பது தெளிவாய் இருக்கிறது. சபையானது ஒரு குழுவாய் அகற்றப்படுவதாய் இருக்கிறது. இதை சபை எடுத்துக்கொள்ளப்படுவது [Rapture of the Church] என அழைக்கிறோம். இதைக்குறித்து குறிப்பாக முறண்பாடானவைகளுக்குள் நாம் நுழையப்போவது இல்லை, நல்ல மக்கள், வேறுபடுகிறவர்களாயிருந்து, இப்பூமியைவிட்டு அகலும் சமயம் எப்பொழுது என அறிகிறவர்களாய் இருக்கிறோம். இக்கால கட்டத்தில், ஒரு விசுவாசியும் மற்றவர்களைப் பார்த்து, "இதை நான் சொல்லவில்லையா" எனச் சொல்வதில்லை, மாறாக, இக்காலகட்டத்தில் அனைவரும் நமது இரட்சகரும், கர்த்தருமாகிய இயேசுவை நோக்கிப்பார்த்தவர்களாய் அவர் மீது கண்ணோக்கம் செய்கிறவர்களாய் இருப்போம். அநேக நூற்றாண்டு காலமாய், சபை யுகத்தில், விசுவாசிகள் கொடிய உபத்திரவங்கள், பாடுகளை அனுபவித்து வந்ததும், அநேக தேசங்களிலும் இவர்கள் சொல்லொண்ணா பாடுகள், உபத்திரவங்களை சகித்து வந்ததும் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

<u>இரண்டாம் குழுவினர்</u> சபை எடுத்துக்கொள்ளப்படும் போது, இயேசுக் கிறிஸ்துவை விசுவாசியாதவர்கள் இதில் அடங்குவர்.. இவர்கள் உலகலாவிய தெய்வீக நியாயத்தீர்ப்பின் போது, (உபத்திரவ காலத்தில்) விசுவாசிகளாவர். இவ்வாறு தேவனது நியாயத்தீர்ப்பில் உள்ளாகி, விசுவாசிகளானவர்கள் நிமித்தம், மகா உபத்திரவ நாட்கள் குறைக்கப்படும் (வெளிப்படுத்தின விஷேசத்தைப் படித்து இது குறித்து அறிந்து கொள்ளுங்கள்) இப்படிப்பட்ட விசுவாசிகள் உபத்திரவ காலத்தில் இருப்பர். இவர்கள் ஜலப்பிரளயத்திற்குப் பின்னர், நோவாவின் குடும்பத்தினர் தங்களது சந்தியினரால் பூமியை நிரப்பினது போல, இவர்களும் ஆயிர வருட அரசாட்சியின் போது, தங்களது சந்ததியினால் பூமியை நிரப்புவார்கள்.

வெளிப்படுத்தின விஷேசம் 7:3-8 ல் 144,000 முத்திரையிடப்பட்ட யூத விசுவாசிகள், உபத்திரவ காலத்தின் போது, பூமியில் சுவிஷேச ஊழியம் செய்து, வரவிருக்கும் மேசியாவின் இரண்டாம் வருகைக்கும், அதைதொடர்ந்துள்ள, 1000 வருட அரசாட்சிக்கும் இக்கால ஜனங்களை ஆயத்தப்படுவர். இந்த 144,000 யூதவிசுவாசிகள் மீது சாத்தானுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை, அவர்களைத் தொட அவனுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. இக்காலக் கட்டத்தில் கொலை செய்யும்படி அனுமதிக்கப்பட்டவர்கள் மீது மட்டும் அவனுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. வெளிப்படுத்தல் 6:9-11.

<u>சமூக நாகரிகம்: 3.</u>

இப்படிப்பட்ட ஆயிரவருட ஆளுகையானது, விசுவாசிகளை மட்டும் கொண்டு இதற்கு முன்னுள்ள சமூக நாகரித்தைப் போன்று துவங்குகிறதாய் இருக்கிறது, இது வெளிப்படுதல் 20:7-9 ன் படி நியாயத்தீர்ப்புடன் நிறைவு பெறுகிறது. ஆயிரம் ஆண்டு காலங்கள், எல்லா அவிசுவாசிகளும் அகற்றப்பட்டு, எல்லா விசுவாசிகளும் தேவனால் பாதுகாக்கப்பட்டிருந்த போதிலும், மகா வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது, அனைத்து மக்களையும் தேவன் நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார். மறுபடியும் 1000 வருடங்கள் எச்சரிப்பு அளிக்கப்படுதல் தெளிவாகிறது, தண்ணீர்

சமுத்திரத்தை மூடிக்கொண்டிருக்கும் வண்ணம், தேவனது வார்த்தையானது பூமியை மூடிக்கொண்டுள்ளது. இக்காலக்கட்டத்தில் சாத்தான் பாதாளத்தில் 1000 ஆண்டுகள் காவல் பண்ணப்படுகிறவனாய் இருக்கிறான்.

கடைசிக் காலத்தில் சபை மற்றும் இஸ்ரவேலரின் கடமைகள்:

இஸ்ரவேலரையும் மற்றும் சபையையும் வேறுபடுத்திக்காட்டுவது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. தேவனுடன் உள்ள உறவில் இரண்டும் வேறுபடுகிறதாய் இருக்கிறது, இஸ்ரவேல் யெகோவா தேவனின், மனைவியாகவும், சபையானது கிறிஸ்துவின் சரீரமாய் இருந்து, எதிர் கால கிறிஸ்துவின் மணவாட்டியாய், தேவனது திட்டத்தில் உட்படுகிறதாய் இருக்கின்றன. முறண்பாடானவைகளை கீழேக் காண்போம்.

இஸ்ரவேலரும் மற்றும் சபையும்:

சபையானது இஸ்ரவேலரிலிருந்து வேறுபடுகிறதாய் இருக்கிறது.

1. யூத ஜனங்கள் (எபிரெயர்கள் / இஸ்ரவேலர்கள்) ஆபிரகாமிலிருந்து துவங்குகிறவர்களாய் இருக்கின்றனர். ஆதி. 12:1-3. -- சபையானது பெந்தெகொஸ்தே நாளிலிருந்து துவங்கியதாய் இருக்கிறது. அப்போஸ்தலர் 2. கலாத்தியர் 3:26-28.

2. இஸ்ரவேலர் பூமியில் ஆசீர்வதிக்கப்பட வாக்குத்தத்தம் பெற்றுள்ளனர். உபாகமம் 28:1-14. -- சபையானது, உன்னதங்களில் ஆசீர்வதிக்கப்பட வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது. எபேசியர் 1:3, எபிரெயர் 3:1.

3. தேவனுடன் இஸ்ரவேலரின் உறவானது, உடன்படிக்கயின் அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளது. ஆதியாகமம் 17:7-8. சபைக்குரிய உறவானது, தேவனுடன், புதிய பிறப்பின் அடிப்படையில் இருக்கிறதாய் இருக்கிறது. யோவான் 1:12-13, 1 பேதுரு 1:23.

4. இஸ்ரவேல் தீர்க்கதரிசனங்கள் முக்கியமாய் பழைய ஏற்பாட்டில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது -- சபைக்கடுத்த தீர்க்கதரிசனங்கள், புதிய ஏற்பாட்டில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது.

5. இஸ்ரவேலர் எருசலேமில் தொழுது கொள்கிறவர்களாயிருக்கின்றனர். சங்கீதம் 122:1-4. -- சபையானது எங்கே இரண்டு அல்லது மூன்று நபர்கள் கிறிஸ்துவின் நாமத்தில் கூடுகிறார்களோ, அங்கு தொழுதுகொள்கிறதாயிருக்கிறது. மத்தேயு 18:18-20.

6. இஸ்ரவேலர் நியாயப்பிரமாணத்திற்கு கீழாக வாழ்ந்தனர். எசேக்கியேல் 20:10-12. -- சபையானது கிருபைக்கு கீழ்ப்பட்டதாய் இருக்கிறது யோவான் 1:17. ரோமர் 6:14.

7. இஸ்ரவேலரின் அந்தியம் பாலஸ்தீனத்துடன் இருக்கிறது. ஏசாயா 60:18-21. -- சபையின் அந்தியம் பரலோகமாய் இருக்கிறது. 1 தெச. 4:13-18.

8. கிறிஸ்து இராஜாவாகவும், மேசியாகவும் இஸ்ரவேலருக்கு விளங்குகிறார் -- கிறிஸ்து சபைக்குத் தலையாகவும், மணவாளனாகவும் விளங்குகிறார்.

9. இஸ்ரவேலர் யூதர்களை மட்டும் உடையவர்களாய் இருந்து விசுவாசி, மற்றும் அவிசுவாசிகளை உடையவர்களாய் இருக்கின்றனர். சபையானது யூதர்கள் மற்றும் புறஜாதியாரை உடையதாய் இருந்து, விசுவாசிகளை மட்டும் உடையதாய் இருக்கிறது.

இஸ்ரவேலர் யெகோவாவின் மனைவி:

இஸ்ரவேல் ஆரம்பகால கட்டத்தில் ஒரு தேசமாய் இல்லை. காரணம், ஜலப்பிரயளத்தின் போது, மனிதர் தவறிவிட்டனர், பின்னர் பாபேலில் தவறினர், தேவன் விஷேசித்த குழுவை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு சந்ததியில் உருவாக்கினார். இவர்களுடன் தேவனுக்குள்ள உறவானது, ஆறுவித்தியாசமான படிகளில் விவரிக்கப்படுகிறது.

1. திருமண ஒப்பந்தம்: -- சீனாய் மலையில் தேவன் இஸ்ரவேலருடன், திருமண ஒப்பந்தத்தில் நுழைகிறவராய் இருந்தார். இப்படிப்பட்ட உடன்படிக்கை எப்பொழுதும் யூத தீர்க்கதரிசிகளால் அறிந்துணரப்படதாய் இருந்தது. உபாகமம் 5:1-3.

இஸ்ரவேல் அந்நிய தேவர்களை பின்பற்றும் விஷயத்தில் எச்சரிக்கப்பட்டு வந்தனர். இத்தகைய செயல்பாடுகள் தேவனது கோபத்திற்கு உள்ளாகி வந்தது. யாத்திராகமம் 20:1-6. உபாகமம் 6:13-15. தேவன் திரும்பவும் இஸ்ரவேலரைத் தெரிவு செய்துள்ளதை விவரிக்கிறவராய் இருக்கிறார். உபாகமம் 7:6. பின்னர் இதே அதிகாரத்தில், தேவன் தனது உண்மை மற்றும் உதாரகுணத்தை தனது மனைவிக்குத் தெரிவிக்கிறவராய் இருக்கிறார். உபாகமம் 7:9-11.

2. விபச்சாரம்: -- ஒரு குறிப்பிட்ட காதலனுடன் அவள் விபச்சாரம் மட்டும் செய்யாது, அநேக காதலர்களுடன் வேசித்தனம் செய்ததைக் குறித்த குற்றமனசாட்சியுடன் காணப்பட்டாள். விபச்சாரம் என்பதன் பொருள் திருமண ஒப்பந்தம் இப்பொழுது செயல் இழந்து வெறுமையாய் காணப்பட்டது. எரேமியா 3:1.

எசேக்கியேல் 16 ம் அதிகாரத்தில் தீர்க்கதரிசி, இஸ்ரவேலரின் விபச்சாரத்தை குறித்த விபரங்களைக் கூறுகிறவராய் இருக்கிறார். இவர்கள் எகிப்து, அசீரியா, கல்தேயர் போன்றோரின் கடவுள்களுடன் விபச்சாரம் செய்ததாய் குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட முறைகெட்ட நடத்தையால் இஸ்ரவேல், அக்கடவுள்கள் வசம் அவள் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அவர்களால் பாதிக்கப்படுமாறு அனுமதிக்கப்பட்டாள். தனக்கு உண்மையாய் இருந்த புருஷனை விட்டு விட்டு, சோரமார்க்கமாய் போனபடியால், அந்நியர்கள் அவளை உபயோக்க நேர்ந்தது.

3. வேறுபிரிக்கப்படல்: -- ஏசாயாவின் காலத்தில் இஸ்ரவேலரின் விபச்சாரத்தால், தேவனுக்கும் அவர்களுக்குமிடையே பிரிவினை உண்டாயிற்று. அவர்களிடையே விவாகரத்து இல்லாதவண்ணம், ஏறத்தாள ஒரு நூற்றாண்டுகாலம் பிரிவினை உண்டாயிற்று. பிரிவினையால் ஆசீர்வாதங்கள் அவளை விட்டு அகற்றப்பட்டது, அவள் உண்மையாய் இருக்கும் பட்சத்தில் அவளுக்குண்டான அனைத்து ஆசீர்வாதங்களும் அவளை விட்டு அகற்றப்பட்டுவிட்டன. ஏசாயா 50:1.

4. விவாகரத்து: -- எரேமியாவின் நாட்களில், தேவனால் இஸ்ரவேல் விவாகரத்து செய்யப்பட்டாள். எரேமியா 3:6-10. நூற்றாண்டுகள் கடந்தும், இஸ்ரவேலில் மனந்திரும்புதல் நிகழாதிருந்தது, இஸ்ரவேலரின் விபச்சாரத்தின் அடிப்படையில், இவ்விவாகரத்து செயல்படுத்தப்பட்டு வந்தது. சமாரியாவில் 10 கோத்திரத்தார் ஏற்கனவே அசீரியர்களால், 721 கி,மு.வில் சிறைபிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டவர்களாய் இருந்தனர், மிகவும் சொற்பமானவர்களே மீந்திருந்து தெற்கு குழுவினிடத்திற்கு திரும்பினர்.

தெற்கு இராஜ்ஜியமான யூதா, யோசியாவின் கீழ், சிலகாலம் தப்பியிருந்தபோதிலும், அவர்களும் கல்தேயனாகிய, நெபுகாத்நேச்சாரால், கி.மு. 586ல், சிறைபிடிக்கப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதிலிருந்து "புறஜாதியாரின் காலத்தில்" நுழைகிறவர்களாய் இருக்கிறோம். இது முதல் சிறையிருப்பான, கி.மு 605 லிருந்து ஆரம்பமாகிறது, இக்காலந்தொட்டு யூத இராஜாக்கள், புறஜாதிய இராஜக்களின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்து அரசாண்டு வந்தனர்.

5. தண்டனை: -- தண்டனை குறித்து பல வேதபகுதிகளில், குறிப்பிடப்பட்டுள்ளது. எசேக்கியேல் 16:35-43 ல் விபச்சாரத்திற்குரிய தண்டனையின் அவசியம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரவேலின் முந்தைய காதலர்களான, எகிப்து, அசீரியா மற்றும் கல்தேயர்களது தேவர்கள் நிமித்தம் இவளுக்கு அளிக்கப்பட்ட தண்டனையைக் காண்கிறோம். இப்படிப்பட்ட தண்டனையின் நோக்கம், இஸ்ரவேல் பாவம் செய்யாது இருக்க அளிக்கப்பட்டதாய் இருந்தது.

வசனங்கள் 58-59 ல், இஸ்ரவேல் திருமண ஒப்பந்தத்தை முறித்து போட்டதால் உண்டான தண்டனைக் குறித்துக் காண்கிறோம். இஸ்ரவேல் பாவம் செய்யாதவாறு தேவன் தொடர்ந்து அழைக்கிறவராய் இருந்தபோதிலும் அவள் தொடர்ந்து பாவம் செய்கிறவளாய் இருந்தாள். இப்படிப்பட்ட அழைப்பை எரேமியா 3:11-18ல் காண்கிறோம். எப்படியிருப்பினும், இஸ்ரவேலரைக் கொண்டு காலத்தைக் கணிப்போமெனில், அவள் இன்றைய நாள் மட்டும் தண்டனைக்குள் இருந்து வருகிறாள், அவள் உலகமுழுவதிலும் சிதறடிக்கப்பட்டு, உலக முழுவதிலும் யூதர்கள் உபத்திரவங்களைச் சகித்து வருகின்றனர்.

6. மறுமணம்: -- ஆறாவது காலகட்டமானது [படியானது], இன்னும் வரவிருக்கிறது என யூதத் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்துள்ளனர். விவாகரத்துக்குப்பின்னர், இது ஒரு புதிய திருமண ஒப்பந்தமாய் இருக்க அவசியம் ஏற்பட்டுள்ளது. இது எரேமியாவின் புதிய உடன்படிக்கையாய் இருக்கிறது. எரேமியா 31:31-34.

இந்த சமயம், இது மோசேயின் உடன்படிக்கை போன்று நிபந்தனையுடன் இல்லாது, புதிய திருமண ஒப்பந்தமானது நிபந்தனையற்றதாயும், நித்தியமானதாயும் இருக்கும். புறஜாதியாரின் காலம் நிறைவுக்கு வரும். இஸ்ரவேல் தேசமானது திரும்ப பெறப்படும். எதிர்காலத்தில், உபத்திரவ காலத்தில் இஸ்ரவேலர், மேசியாவாகிய இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்னர், இஸ்ரவேலை யெகோவா தேவன் மறுமணம் செய்து கொண்டு, அவளது இழந்து போன ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அவளுக்கு திரும்ப அளிப்பார்.

மேசியாவின் கன்னிகை மணவாட்டி - சபை:

தேவனுக்கும் சபைக்குமிடையே உள்ள உறவானது முற்றிலும் வித்தியாசமானதாய் இருக்கிறது. மற்றும் தேவனுக்கும் இஸ்ரவேலருக்குமிடையே உள்ள உறவானதும் வித்தியாசமானதாய் இருக்கிறது. சபையானது, இஸ்ரவேலரின் விவாகரத்தின் போதும் மற்றும் இஸ்ரவேலர் சிதறடிக்கப்பட்டபோதும், இடம்பெறுகிறதாயும், மற்றும் நிறைவு பெறுகிறதாயும் இருக்கிறது. சபையானது புறஜாதியாரின் காலத்தில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது.

இஸ்ரவேல் விபச்சார குற்றமனசாட்சி போன்றல்லாது, சபையானது குற்றமில்லா கற்புள்ள கன்னிகையாய் மேசியாவிற்கு கையளிக்கப்படுவதாய் இருக்கிறது. கி.பி. 32 ல், பெந்தெகொஸ்தே நாளில், ஆவிக்குரிய புது குழுவாக சபையானது உருவானது. சபையின் அங்கத்தினர் திரும்ப உருவாக்கப்படுதலின் அடிப்படையில், சபை அங்கத்தினர் அனைவருக்கும், இரட்சிப்பின் போது, கிறிஸ்துவின் நீதியானது அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாய் கூறப்படுகிறது, திருமண வைபவத்திற்கு முன்னதாக சபையானது, கற்புள்ள தூய கன்னிகையாய் கிறிஸ்துவுக்குக் கையளிக்கப்படுகிறவளாய் இருக்கிறாள். இக்கால கட்டத்தில், பாவ சுபாவமானது அகற்றப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது, இதற்கு உயிர்த்தெழுந்த சரீரம் அளிக்கப்பட்டு, மனித நன்மைகள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் கீழ் அகற்றப்படுகிறதாய் இருக்கிறது.

இதில் இரு கருத்துக்கள் இடம் பெறுகிறதாய் இருக்கிறது. முதலாவதாக, சபை எடுத்துக் கொள்ளப்படும்போது, உயிர்த்தெழுந்த சரீரமானது அளிக்கப்படுகிறது, பழைய பாவ சுபாவம் அகற்றப்படுகிறது. இரண்டாவதாக, பரலோகில் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு நிகழ்கிறதாய் இருக்கிறது. நமது தெய்வீக நற்கிரியைகள் சீர்தூக்கிப்பார்க்கப்பட்டு, மனித நன்மைகள் அகற்றப்பட்டு, தெய்வீக நன்மைகளுக்குத் தக்கவாறு பிரதிபலன்கள் அளிக்கப்படும். 1 கொரி. 3:11-15. அதன் பின்னர் கற்புள்ள கன்னிகையாய் மேசியாவின் மணவாட்டியாய், சபை கையளிக்கப்படும்.

திருமண வைபவம் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து பூமிக்கு இரண்டாம் முறை வருவதற்கு முன் பரலோகில் நிகழ்வதாய் இருக்கிறது. திருமண விருந்தானது பூமியில் இடம் பெறும். சபையாகிய மணவாட்டிக்கு, பரலோகில் திருமண வைபவம் முடிந்த பின்னர், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பூமிக்கு அவருடன் வந்து, அவருடன் இணைந்து பூமியில் ஆளுகை மேற்கொள்ளப்படும்.

மணவாட்டியான, சபையானது வெற்றியுடன் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பூமிக்குத் திரும்பும். கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து தமது எல்லா பரிசுத்தவான்களுடன் பூமிக்கு திரும்ப வருவார் என இந்நிருபத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 1 தெசலோனிக்கேயர் 3:13.

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, அவர் முடிசூடப்பட்டு இவ்வுலகின் இராஜாவாக இருப்பார். வெளி. 19:6.

ஆட்டுக்குட்டியானவரின் கலியான விருந்து குறித்து வெளி. 19:7-9 ல் விவரிக்கப்பட்டுள்ளது. ஆட்டுக்குட்டியானவரின் கலியானம் பரலோகில் நிகழ்ந்து, திருமண விருந்தானது, பூமியில் இடம் பெறுகிறதாய் இருக்கும். இத்திருமண விருந்தில் நான்கு வித குழுவினர் பங்கேற்பர்.

1. மணவாளன் -- இயேசு கிறிஸ்து.

2. மணவாளனின் தோழர்கள் -- பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள். (யோவான் 3:29)

3. மணவாட்டி -- சபையுக விசுவாசிகள்.

